# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 310 / 2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW6<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **Thiru. Sivakumar** |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20th day of July, 2026.

**( Accused is present )**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 12.24 மணி

நான் தற்போது பழவேற்காட்டில் வசித்து வருகிறேன். 25-04-2021 அன்று காலை 7.00 மணிக்கு பொன்னேரி பேருந்து நிலையத்திற்கு சென்றேன். அங்கு போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். என்ன சம்பவம் என்று கேட்க சென்றேன். அங்கு டிஎஸ்பி மற்றும் போலீசார்

நின்று கொண்டிருந்தார்கள். பன்னீர்செல்வம் குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் வைரவன்குப்பம் சென்றார்கள். வைரவன்குப்பத்தில் உள்ள பன்னீர்செல்வம் வீட்டிலிருந்து பேண்ட், சட்டை எடுத்து கொடுத்தார். நான் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சந்தன நிற சட்டை **அ.சா.பொ.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீல நிற டிராக் பேண்ட் **அ.சா.பொ.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

எதிரியிடம் போலீசார் எதிரி சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டதை பார்தேனா என்றால் பார்த்தேன். எதிரி வாக்குமூலம் கொடுக்கும்போது தன்னை அழைத்து போனால் சம்பவயிடத்தையும் துணிகளை மறைத்து வைத்திருந்த இடத்தையும் அடையாளம் காட்டுகிறேன் என்று கூறினார் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு போலீசார் எதிரியை அழைத்து சென்றார்களா என்றால் சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது எதிரி துணிகளை எடுத்து கொடுத்ததாக கூறியுள்ளேன் எத்தனை மணிக்கு எடுத்து கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. பொன்னேரி பஸ் ஸ்டாண்ட் போனபோது அங்கு ஜனங்கள் இருந்தார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அங்கு போலீசார் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமாராக 10 பேர் இருந்திருப்பார்கள். பொன்னேரியில் இரண்டு பஸ் ஸ்டாண்ட் உள்ளது எந்த பஸ் ஸ்டாண்ட் என்றால் பொன்னேரி புதிய பஸ் ஸ்டாண்ட்டில் விசாரித்தார்கள். பஸ் ஸ்டாண்ட்டில் எந்த இடத்தில் விசாரித்தார்கள் என்றால் பஸ் ஸ்டாண்ட் உள்ளே இருந்து வெளியே திரும்ப போகும் இடத்தில்

ஜூஸ் கடைஉள்ளது அதன் அருகில் வைத்து விசாரித்தார்கள். அதை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியை போலீசார் விசாரித்த போது அவர் என்ன நிற உடை அணிந்திருந்தார் என்றால் தெரியாது. போலீசார் கையால் எழுதி வைத்திருந்த பேப்பரில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் 7 ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் கையொப்பம் போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்ததது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் மற்றொரு கையொப்பம் போட்ட பேப்பரில் கையால் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும் ஆனந்த் என்பவரும் சிவரஞ்சினியின் உறவினர் என்றால் நான் உறவினர் அல்ல ஊர்காரர். எங்கள் ஊர் தலைவர் ஜெய்சங்கர் என்றால் சரிதான். இந்த வழக்கிற்காக ஊர் தலைவர் ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த வழக்கில் சாட்சியாக இருக்கிறேன் என்றால் சரிதான். சிவரஞ்சினிக்கு நடந்த சம்பவம் குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். 25-04-2021 முன்பு சம்பவம் என்று நடந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் 23-04-2021 அன்று சம்பவம் நடந்ததாக கேள்வி பட்டேன். 23 ஆம் தேதி திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் எதிரியை விசாரித்த விவரம் எனக்கு தெரியும். நான் ஜெய்சங்கர் கூறி இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur